**ராஜகிரிய, பொல்காவெல மற்றும் கனேமுல்ல ஆகிய இடங்களில் மேம்பாலங்களை நிர்மானிப்பதற்கான செயற்திட்டம் - 2018**

---

ராஜகிரிய, பொல்காவெல மற்றும் கனேமுல்ல ஆகிய இடங்களில் மேம்பாலங்களை நிர்மானிப்பதற்கான செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஸ்பெய்ன் அரசாங்கம் மற்றும் பின்கோ பிலாபோ விஸ்கயார்ஜென்டரியா, ஸ்பெய்ன் இன் எஸ்.ஏ விற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 திசெம்பர் 14 ஆந் திகதிய எஸ்எல்ஆர்-14809 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் உறுப்புரை 01 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. சமமான இயங்கு வசதிகளை வழங்குதல் மற்றும் வாகன நெரிசலுடன் தொடர்புபட்ட பொருளாதார மற்றும் சமூக கிரயங்களை சேமித்தல் மற்றும் நாட்டின் சமூக பொருளாதார நிலமைகளை முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,762 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 55.78 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,862 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 50.64 மில்லியன் ஸ்பெய்ன் அரசாங்கம் மற்றும் பின்கோ பிலாபோ விஸ்கயார்ஜென்டரியா, ஸ்பெய்ன் இன் எஸ்.ஏ வினால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 900 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 ஏப்ரல் 19 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2020 ஜுன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

பொல்காவெல, ராஜகிரிய மற்றும் கனேமுல்லவிலுள்ள மேம்பாலங்களின் வடிவமைப்பு, வழங்கள் மற்றும் நிர்மானம் போன்றவற்றிற்கான ஒப்பந்தமானது யூரோ 53.71 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் டெர்ன்கீ (Turnkey) அடிப்படையின் கீழ் வெளிநாட்டு நிர்மான கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. உரிய நிர்மான வேலைகள் 2016 ஏப்ரல் 19 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 32 மாதங்களிற்குள் பூர்த்தியாக்க பட்டியலிடப்பட்டிருந்தது. மேம்பாலங்கள் பூர்த்தியாக்க திட்டமிடப்பட்ட திகதியிலிருந்து 11 மாதங்களிற்கு முன்னர் 2018 சனவரியில் போக்குவரத்திற்காக திறந்து விடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் சாத்தியவள அறிக்கையின் பிரகாரம், ராஜகிரிய மேம்பால நிர்மானத்தின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார உள்ளக திரும்பல் விகிதம் 47.50 சதவீதமாவும், நன்மை கிரய விகிதம் 14.98 சதவீதமாகவும், மற்றும் நிகர இற்றைப் பெறுமதி 17,737 மில்லியனாகவும் கணிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், ஒப்பந்ததாரரினால் தயாரிக்கப்பட்ட பிந்திய விளைவு மதிப்பீட்டு அறிக்கையானது பொருளாதார உள்ளக தீரும்பல் விகிதம் 43.30 சதவீதத்தினையும், நன்மை கிரய விகிதம் 8 சதவீதத்தினையும் நிகர இற்றைப் பெறுமதி ரூபா 10,163 மில்லியனையும் மாத்திரமே மேம்பாலத்தின் நிர்மான வேலையின் பூர்த்தியாக்கல் நேரத்தில் அடயப்பட்டிருந்ததாக காட்டியது. இதனால், மேம்பாலத்தின் நிர்மானத்தின் மீதான உரிய முன்னோக்கலுடன் தொடர்புடய சமூக நன்மைகள் நிர்மான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிடத்தக்க வகையில் குறைவடைந்துள்ளமையை இது உறுதிப்படுத்துகின்றது.

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| பொல்காவலலிலுள்ள புகையிரத ஓய்வரையின் மீள் நிர்மான வேலைகள் ஆரம்பகட்டத்தில் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அடயாளப்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 23.40 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் அதன் மீதான ஒப்பந்தம் வேறொரு ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இலங்கை அரசாங்கத்தினால் மேலதிக கிரயங்கள் செய்யப்பட்டன. | கருத்துறைகள் கிடைக்கப்பெறவில்லை. | செய்யப்பட வேண்டிய வேலைகள் மீது நில அளவைகளை செய்வதற்கு எதிர்பாராத மேலதிக கிரயங்களை தவிர்ப்பதற்கும் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 2.3 சச்சரவுத்தன்மையான விடயங்கள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2018 சனவரியில் பூர்த்தியாக்கப்பட்டிருப்பினும், செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் செயற்பாடுகள் செயற்திட்டத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றுவதில் தாமதம் மற்றும் காணி சுவீகரிப்பு செயற்பாடுகளின் பூர்தியாக்கலில் தாமதம் போன்ற காரணங்களினால் 2018 திசெம்பர் 31 வரை தொடரப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் செயற்பாடுகளை மூடுவதற்கு நேர நீடிப்பிற்கான சாத்தியம். | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | செயற்திட்த்தின் செயற்பாடுகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |